17வது நாடாளுமன்றம் நேற்றுடன் நிறைவடைந்தது

சீர்திருத்தம், செயல்பாடு, மாற்றங்களால் 'வளர்ச்சிப் பாதையில் நாடு பயணம்'

பிரதமர் மோடி பெருமிதம்

புதுடெல்லி, பிப்.11– **17வது நாடாளுமன்றம் நேற்றுடன் நிறைவடைந்தது. எம்.பி.க்களுக்கு நன்றி தெரிவித்து பேசிய பிரதமர் மோடி, 'சீர்திருத்தம், செயல்பாடு, மாற்றங்களால் வளர்ச்சிப் பாதையில் நாடு பயணம் செய்வதாக' தெரிவித்தார்.**

நாடாளுமன்ற பட்ஜெட் தொடர் கடந்த மாதம் 31ந் தேதி தொடங்கியது. இதில் இடைக்கால பட்ஜெட் கடந்த 1ந் தேதி தாக்கல் செய்யப்பட்டது.

அதைத்தொடர்ந்து நேற்று வரை நாடாளுமன்ற இரு அவைகளிலும் பல்வேறு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன. 17வது மக்களவைக்கு இது கடைசி தொடர் என்பதால் உறுப்பினர்கள் அனைவரும் பெரும் உணர்ச்சிப்பெருக்குடன் இந்த தொடரில் பங்கேற்றிருந்தனர்.

பட்ஜெட் கூட்டத்தொடரின் நிறைவு நாளான நேற்று மக்களவையில் அயோத்தி ராமர் கோவில் குறித்து சிறப்பு விவாதம் நடந்தது. பின்னர் ராமர் கோவில் கும்பாபிஷேகத்துக்காக பிரதமர் மோடியை பாராட்டி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பின்னர் மக்களவையின் கடைசி அமர்வில் பிரதமர் மோடி சிறப்புரையாற்றினார். அப்போது அவர் சபாநாயகர் ஓம் பிர்லா மற்றும் எம்.பி.க்களுக்கு நன்றி தெரிவித்தார். அத்துடன் கடந்த 5 ஆண்டுகளில் தனது அரசு மேற்கொண்ட சாதனைகளை பட்டியலிட்டு பெருமிதம் பகிர்ந்து கொண்டார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:

இந்த சபையை எந்தவித பக்க சார்பும் இன்றி நீங்கள் (சபாநாயகர்) வழிநடத்தினீர்கள். என்ன நடந்தாலும் உங்கள் முகத்தில் எப்போதும் புன்னகை இருக்கும். கோபம் மற்றும் குற்றச்சாட்டுகள் போன்றவை இருந்தாலும் சூழ்நிலையை பொறுமையாக கையாண்டீர்கள். புத்திசாலித்தனமாக அவையை வழிநடத்தினீர்கள். அதற்காக உங்களை பாராட்டுகிறேன்.

நாடாளுமன்றத்தில் செங்கோல்

நாடாளுமன்றத்துக்கு புதிய கட்டிடம் வேண்டும் என்ற பேச்சு நீண்டகாலமாக இருந்து வந்தது. ஆனால் சபாநாயகரின் உறுதியால் இந்த 17வது மக்களவை காலத்தில் அது நனவானது. மேலும் சபாநாயகர் ஓம் பிர்லா தலைமையில் அவையில் பாரம்பரிய முறைப்படி செங்கோல் நிறுவப்பட்டது.

ராமர் கோவில் தொடர்பான மக்களவையின் தீர்மானம் வருங்கால சந்ததியினருக்கு நாட்டின் விழுமியங்களைப் பற்றி பெருமிதம் கொள்ள அரசியலமைப்பு பலத்தை அளிக்கும்.

இந்த விஷயங்களுக்கான திறன் அனைவருக்கும் இல்லை என்பது உண்மைதான். சிலர் அதை தைரியமாக எதிர்கொள்கின்றனர், மற்றவர்கள் போர்க்களத்தைவிட்டு ஓடுகிறார்கள். ஆனால் எதிர்கால பதிவுக்காக, இன்று ஆற்றிய உரைகளில் உணர்திறனும்,

உறுதியும், அனுதாபமும் இருக்கிறது. 'சப்கா சாத், சப்கா விகாஸ்' என்ற மந்திரத்தையும் முன்னோக்கி எடுத்துச் செல்கிறது.

கடந்த 5 ஆண்டுகளில் ஏராளமான சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. அதன் மூலம் 21ம் நூற்றாண்டு இந்தியாவின் வலுவான அடித்தளத்தைக் காணலாம்.

17வது மக்களவை சீர்திருத்தம், செயல்பாடு மற்றும் மாற்றத்துக்கான காலகட்டமாக இருந்தது. இது மிகவும் அரிதானது ஆகும். நாடு பெரிய மாற்றங்களை நோக்கி வளர்ச்சிப்பாதையில் வேகமாக நடைபோடுகிறது. இதற்கு அவையின் அனைத்து உறுப்பினர்களும் முக்கிய பங்களிப்பை வழங்கி உள்ளனர்.

மகளிர் இடஒதுக்கீடு மசோதா

பல நூற்றாண்டுகளாக மக்கள் காத்திருந்த பணிகள் இந்த காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. ஏராளமான முக்கிய முடிவுகள் 17வது மக்களவையில் எடுக்கப்பட்டு இருக்கின்றன. பல சவால்களை எதிர்கொண்டு நாட்டுக்கு சரியான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன. இதை மனநிறைவோடு கூறலாம்.

ஒரே அரசியலமைப்பு சட்டத்துக்காக பல தலைமுறைகளாக மக்கள் காத்திருந்தனர். ஆனால் அரசியலமைப்பு சட்டப்பிரிவு 370 ஐ (காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து) நீக்கியதன் மூலம் அதை சாத்தியமாக்கி இருக்கிறோம். மகளிர் இடஒதுக்கீடு மசோதா நிறைவேற்றியது, முத்தலாக்கை குற்றமாக்கியது போன்றவை வரலாற்று சிறப்புமிக்க தருணங்கள் ஆகும்.

ஜி20 தலைமைத்துவம்

விளிம்புநிலை மக்கள் அரசின் இருப்பை உணர்ந்துள்ளனர். திருநங்கைகளின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

இந்த காலகட்டத்தில்தான் ஜி–20 அமைப்பின் தலைமைத்துவத்தை இந்தியா பெற்றது. நாட்டின் வலிமையையும், தங்கள் அடையாளத்தையும் ஒவ்வொரு மாநிலமும் வெளிப்படுத்தின.

இந்த நாடு 75 ஆண்டுகள், 'தண்டனைச் சட்டத்தின்' கீழ் வாழ்ந்திருக்கலாம். ஆனால் இப்போது நாம் 'நியாய சம்ஹிதா'வின் கீழ் வாழ்கிறோம் என்று பெருமையுடன் சொல்லலாம். சாதாரண குடிமக்களின் வாழ்க்கையை எளிதாக்குவதற்காக கடந்த 5 ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான சிக்கலான சட்டங்கள் அகற்றப்பட்டன.

மக்களின் அன்றாட வாழ்க்கையில் இருந்து அரசு எவ்வளவு விரைவாக வெளியேறுகிறதோ, அவ்வளவு விரைவாக ஜனநாயகம் வலுவாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

17வது மக்களவை 97 சதவீத செயல்பாட்டை கொண்டிருந்தது. தற்போது நாம் இந்த மக்களவையின் முடிவை நோக்கி நகர்கிறோம். அதேநேரம் 18வது மக்களவையின் செயல்பாட்டுத்திறன் 100 சதவீதத்திற்கு மேல் இருக்க வேண்டும் என்று உறுதிபூண்டுள்ளோம்.

வரவிருக்கும் மக்களவை தேர்தல்கள் இந்திய ஜனநாயகத்தின் பெருமையை உயர்த்தும் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உள்ளது.

இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

222 மசோதாக்கள்

பின்னர் சபாநாயகர் ஓம் பிர்லா தனது இறுதி உரையில், 'கடந்த 5 ஆண்டுகளில் ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சியினரை சமமாகவே நடத்தினேன். அவையின் கண்ணியத்தை காக்க சில நேரம் கடுமையான முடிவுகளையும் எடுக்க வேண்டியிருந்தது' என கூறினார்.

17வது மக்களவையில் கடந்த 5 ஆண்டுகளில் 222 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். பின்னர் மக்களவையை தேதி குறிப்பிடாமல் சபாநாயகர் ஒத்திவைத்தார்.

அனைத்து தகவல் தொழில்நுட்பங்களிலும் தமிழை அதிகம் பயன்படுத்துங்கள்: இளைய தலைமுறையினருக்கு ஸ்டாலின் வேண்டுகோள்

சென்னை, பிப்.11 **அனைத்து தகவல் தொழில்நுட்பங்களிலும் தமிழை அதிகம் பயன்படுத்த வேண்டும் என்று இளைய தலைமுறையினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

நந்தம்பாக்கம் சென்னை வர்த்தக மையத்தில், பன்னாட்டு கணித்தமிழ் மாநாட்டு நிறைவு விழா நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில், முதல்மைச்சர் மு.க.ஸ்டாலினின் வாழ்த்துச் செய்தியை, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் வாசித்தார். அதில் கூறப்பட்டு இருப்பதாவது:

மற்ற மாநிலங்களைவிட தகவல் தொழில்நுட்பத்துறையில் தமிழ்நாடு முன்னேறி இருக்க காரணம், மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வார்கள். ஆங்கிலத் தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்டு வரும் என்.எல்.பி.டி., செயற்கை நுண்ணறிவு, எந்திரவழிக் கற்றல், எந்திர மொழியாக்கம், 'சென்டிமென்டல் அனலிசிஸ்', அதிகளவில் மொழி மாதிரிகளை உருவாக்குதல் (எல்.எல்.எம்.), தானியங்கி பேச்சு அடையாளம் காணல் (ஏ.எஸ்.ஆர்.) போன்றவற்றை தமிழில் உருவாக்கும் முயற்சியாக இந்த மாநாடு நடைபெற்றுள்ளது. எந்தவிதமான தொழில்நுட்பம் வந்தாலும் அவை அனைத்திலும் தமிழ் வாழ வேண்டும், ஆள வேண்டும் என்பதுதான் எங்களது நோக்கம். செயற்கை நுண்ணறிவு யுகத்தில் மொழித் தொழில்நுட்பத்துக்காக இந்தியாவிலேயே முதன்முதலாக மாநாடு நடத்துவது தமிழ்நாடு அரசுதான் என்பதில் பெருமை அடைகிறேன். இந்த மாநாட்டுக்கு 10 நாடுகளைச் சேர்ந்த அறிஞர்கள் வருகை தந்துள்ளார்கள்.

செயற்கை நுண்ணறிவு பாதையில் தமிழ்மொழியை வெற்றிகரமாக பயணிக்க வைக்க வேண்டும். தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப தமிழ்மொழி தகவமைக்கப்பட வேண்டும். ஆங்கிலம் போன்ற மொழிகளைப்போல தமிழில் தொழில்நுட்பச் சேவைகள் அனைத்தும் கிடைக்க தமிழ்நாடு அரசும் ஆவன செய்யும். உலகளாவிய நிறுவனங்கள் வெளியிடும் மென்பொருட்கள் மற்ற மொழிகளில் வெளியாகி, தமிழுக்கு காலதாமதமாக வருகிறது. இந்த இடைவெளியை குறைத்தாக வேண்டும். ஆங்கிலம் போன்ற மொழிகளுக்கு மென்பொருட்கள் வரும்போதே தமிழுக்கும் வந்தாக வேண்டும்.

அத்தகைய பன்னாட்டு நிறுவனங்களுக்கு தமிழ்மொழி சார்ந்த வளத்தையும், வழிகாட்டுதல்களையும் தமிழ்நாடு அரசு வழங்கும். இளைய தலைமுறையினர் அனைத்து தகவல் தொழில்நுட்பங்களிலும் தமிழை அதிகம் பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

மேலும் இதுதொடர்பாக மு.க.ஸ்டாலின் 'எக்ஸ்' தளத்தில், 'கணித்தமிழ் மாநாடு, தமிழ் மொழி தொழில்நுட்ப துறையில் தடம் பதிக்கிறது' என்று குறிப்பிட்டுள்ளார்.

வானிலை செயற்கைகோளை சுமந்தபடி

ஜி.எஸ்.எல்.வி. எப்–14 ராக்கெட் 17ந்தேதி விண்ணில் பாய்கிறது

இஸ்ரோ விஞ்ஞானிகள் அறிவிப்பு

சென்னை, பிப்.11– **வானிலை, பேரிடர் எச்சரிக்கை தகவல்களை அளிக்கும் 'இன்சாட்–3 டி.எஸ்.' செயற்கைகோளை சுமந்தபடி வருகிற 17ந்தேதி மாலை ஜி.எஸ்.எல்.வி. எப்14 ராக்கெட் விண்ணில் பாய்கிறது.**

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) வானிலை மற்றும் பேரிடர் எச்சரிக்கை தகவல்களை முன்கூட்டியே பெறுவதற்காக, 'இன்சாட்–3டி.எஸ்.' என்ற செயற்கைகோளை வடிவமைத்துள்ளது. இதனை ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து ஜி.எஸ்.எல்.வி. எப்.14 ராக்கெட்டில் பொருத்தி வருகிற 17ந்தேதி (சனிக்கிழமை) மாலை 5.30 மணிக்கு இஸ்ரோ விண்ணில் ஏவுகிறது.

இந்த ராக்கெட்டுக்கான இறுதிக்கட்டப்பணி யான 'கவுண்ட்டவுன்' வருகிற 16ந்தேதி தொடங்க வாய்ப்பு உள்ளது. ஜி.எஸ்.எல்.வி. ரக ராக்கெட்டில் 16வது ராக்கெட் என்ற பெருமையை இது பெறுகிறது. மத்திய அரசின் பூமி அறிவியல் அமைச்சகம் இதற்கு நிதி வழங்கி உள்ளது.

இந்த செயற்கைகோளின் முதன்மை நோக்கங்கள் என்பது பூமியின் மேற்பரப்பை கண்காணிக்க முடிவதுடன், வானிலை முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு நிறமாலை சேனல்களில் கடல் கண்காணிப்பு மற்றும் அதன் சுற்றுச்சூழலை மேற்கொள்ள முடியும். வளிமண்டலத்தின் பல்வேறு வானிலை பாரா மீட்டர் தகவல்களையும் வழங்கும்.

அத்துடன் தரவு சேகரிப்பு தளங்களில் இருந்து தரவு சேகரிப்பு மற்றும் தரவு பரப்புதல் திறன்களையும் வழங்கும். அத்துடன் செயற்கைகோள் உதவி, தேடல் மற்றும் மீட்பு சேவைகளையும் அளிக்கும்.

வானிலை செயற்கைகோளை சுமந்து செல்லும் ஜி.எஸ்.எல்.வி. எப் 14 ராக்கெட் 420 டன் எடை, 51.7 மீட்டர் உயரத்துடன் 3 நிலைகளை கொண்டது. முதல் நிலையில் 139 டன் உந்து சக்தியை கொண்ட திட உந்துசக்தி மோட்டார் மற்றும் 4 உந்து சக்தி நிலைகள் ஒவ்வொன்றும் 40 டன் திரவ உந்துசக்தியை கொண்டுள்ளன.

2வது நிலையில் 40 டன் உந்து சக்தியுடன் கூடிய எந்திரம், 3வது நிலையில் 15 டன் திரவ ஆக்சிஜன் மற்றும் திரவ ஹைட்ரஜன் கொண்ட கிரையோஜெனிக் நிலையாகும். வளிமண்டலத்தில் இருக்கும்போது செயற்கைகோளை 'ஓகிவ் போலோட் பேரிங்' என்ற நவீன முறையில் பாதுகாக்கப்படுகிறது என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் அதிகாரப்பூர்வமாக தெரிவித்து உள்ளனர்.

சாயாஜி ஹோட்டல்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: எப்1 சி2, சிவவேல் அபார்ட்மெண்ட், 2 அழகப்பா நகர், ஜமீன் பல்லாவரம், சென்னை, தமிழ்நாடு–600 117.
போன்: 044-29871174 | Email: cs@sayajigroup.com | Website: www.sayajihotels.com | CIN:L51100TN1982PLC124332

31 டிசம்பர் 2023–ல் முடிந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்

(இந்திய ரூபாயில் லட்சத்தில் இபிஎஸ் தவிர)

வ. எண்.	விவரங்கள்	தனியானது				ஒருங்கிணைந்தது			
		முடிந்த காலாண்டு		முடிந்த 9 மாதங்கள்	முடிந்த ஆண்டு	முடிந்த காலாண்டு		முடிந்த 9 மாதங்கள்	முடிந்த ஆண்டு
		31.12.2023 தணிக்கை செய்யாதது	31.12.2022 மீண்டும் கூறப்பட்டது	31.12.2023 தணிக்கை செய்யாதது	31.03.2023 மீண்டும் கூறப்பட்டது	31.12.2023 தணிக்கை செய்யாதது	31.12.2022 மீண்டும் கூறப்பட்டது	31.12.2023 தணிக்கை செய்யாதது	31.03.2023 மீண்டும் கூறப்பட்டது
1	செயல்பாடுகள் மூலம் மொத்த வருவாய் (நிகரம்)	3245.86	3,192.05	8,083.87	14,173.69	3,249.67	3,194.55	8,095.89	11,813.89
2	காலத்திற்கான நிகர லாபம் /(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள் முன்)	831.48	596.79	1,353.86	4,202.08	835.11	599.56	1,364.34	1,828.45
3	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் /(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள் பின்)	831.48	596.79	1,353.86	4,202.08	964.84	813.65	997.90	2,335.00
4	வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் /(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள் பின்)	697.70	1,370.15	990.83	5,399.83	830.15	1,567.34	632.26	3,509.49
5	காலத்திற்கான மொத்த பரிபூரண வருமானம் /(நஷ்டம்) (காலத்திற்கான லாபம் (வரிக்கு பின்) மற்றும் இதர பரிபூரண வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது)	702.56	1,364.27	976.25	5,375.85	842.52	1,582.62	631.47	3,463.27
6	சமபங்கு மூலதனம்	1,751.79	1,751.79	1,751.79	1,751.79	1,751.79	1,751.79	1,751.79	1,751.79
7	ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக) கடந்த ஆண்டு தணிக்கை செய்யப்பட்ட பேலன்ஷீட்டில் கொடுக்கப்பட்டுள்ளது.	-	-	-	-	-	-	-	-
8	ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் முகமதிப்பு ரூ.10/–) (தொடர் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்)								
	அடிப்படை	3.97	7.57	5.64	30.25	4.74	8.60	3.61	18.67
	டைலூடட்	3.97	7.57	5.64	30.25	4.74	8.60	3.61	18.67

குறிப்பு

அ. SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு மற்றும் இன்றைய தேதி வரையிலான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டு மற்றும் இன்றைய தேதி வரையிலான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ் இணையதளம் (www.bseindia.com) மற்றும் நிறுவனத்தின் இணையதளம் (www.sayajihotels.com)ல் உள்ளது.

குழு உத்தரவுப்படி
சாயாஜி ஹோட்டல்ஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
T.N. உன்னி (சேர்மன்)

இடம்: இந்தூர்
தேதி: 11.02.2024

TULSYAN NEC LIMITED

Regd. Off. : 1st Floor, Apex Plaza, 3, Nungambakkam High Road, Chennai - 600 034. **Phone :** 044 - 6199 1060.
Fax : 044 - 6199 1066. **email :** investor@tulsyannec.in
Website : www.tulsyannec.in **CIN No. :** L28920TN1947PLC007437

Extract of unaudited Standalone and Consolidated Financial Results for the Quarter and Nine Months ended December 31, 2023 under Ind AS

(₹ in Lakhs)

Sl. No.	Particulars	Standalone			Consolidated		
		Quarter ended December 31, 2023 (Unaudited)	Year to date figures December 31, 2023 (Unaudited)	Previous quarter ended December 31, 2022 (Unaudited)	Quarter ended December 31, 2023 (Unaudited)	Year to date figures December 31, 2023 (Unaudited)	Previous quarter ended December 31, 2022 (Unaudited)
1.	Total Income from Operations	24,879.80	74,576.45	21,575.61	25,512.36	75,283.75	22,345.17
2.	Net Profit/(Loss) for the period (before tax and exceptional items)	(1,437.90)	(2,752.95)	(2,505.17)	(1,445.56)	(2,732.63)	(2,709.33)
3.	Net Profit/(Loss) for the period before tax (after exceptional items)	(1,437.90)	(2,752.95)	(2,505.17)	(1,445.56)	(2,732.63)	19,196.83
4.	Net Profit/(Loss) for the period after tax (after exceptional items)	(1,437.90)	(2,941.87)	(2,505.17)	(1,445.56)	(2,921.55)	19,196.83
5.	Other comprehensive Income (net of tax)	4.02	12.06	(14.09)	4.02	12.06	(14.09)
6.	Total comprehensive Income for the period [comprising Profit/(Loss) for the period (after tax) and Other comprehensive Income (after tax)]	(1,433.88)	(2,929.81)	(2,519.27)	(1,441.54)	(2,909.49)	19,182.74
7.	Equity Share Capital (face Value of Rs.10 per share)	1,655.13	1,655.13	1,471.38	1,655.13	1,655.13	1,471.38
8.	Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet of the previous year						
9.	Earnings Per Share (of Rs.10/- each) (for continuing and discontinued operations)						
	(a) Basic	(8.69)	(17.77)	(17.03)	(8.73)	(17.65)	130.47
	(b) Diluted	(8.69)	(17.77)	(17.03)	(8.73)	(17.65)	130.47

NOTES :

1. The above results were reviewed by the Audit Committee and thereafter approved and taken on record by the Board Of Directors at their meeting held on February 10, 2024.
2. The statement has been prepared in accordance with the Companies (Indian Accounting Standards) Rules, 2015 (Ind AS) prescribed under section 133 of the Companies Act, 2013 and other recognised accounting practices and policies to the extent applicable.
3. The above is an extract of the detailed format of the unaudited financial results for the Quarter and Nine months ended December 31, 2023 filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Unaudited Financial Results for the Quarter and Nine months ended December 31, 2023 are available on the website of the BSE Limited i.e. **www.bseindia.com**, on the Stock Exchange where the Company's shares are listed and on the website of the Company i.e., **www.tulsyannec.in**
4. The previous year figures have been regrouped/re-classified wherever necessary.

for Tulsyan NEC Limited
Sd/-
Sanjay Tulsyan
Managing Director
DIN : 00632802

Place : Chennai
Date : 10th February, 2024

பிளஸ்–2 செய்முறை தேர்வு நாளை தொடங்குகிறது

சென்னை, பிப்.11–

எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ்1 மற்றும் பிளஸ் 2 வகுப்பு மாணவர்களுக்கான பொதுத்தேர்வு மார்ச் 1ந் தேதி முதல் வருகிற ஏப்ரல் மாதம் 8ந் தேதி வரை நடைபெற இருக்கிறது.

பொதுத்தேர்வுக்கு முன்னதாக பிளஸ்–2 மாணவர்களுக்கான செய்முறை தேர்வுகள் நாளை தொடங்கி வருகிற 17ந் தேதி வரை நடைபெற உள்ளன.

மாநிலம் முழுவதும் 5 ஆயிரம் மேல்நிலைப்பள்ளிகளில் படிக்கும் 6 லட்சம் மாணவர்கள் தேர்வில் பங்கேற்க உள்ளனர். ஒரு சுற்றுக்கு 25 முதல் 30 மாணவர் களை மட்டுமே அனுமதிக்க வேண்டும்.

எந்த புகாருக்கும் இடம் அளிக்காமல் செய்முறை தேர்வை நடத்தி முடிக்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு அறிவுறுத்தல்கள் வெளியிடப்பட்டு உள்ளன.

NOTICE OF LOSS OF SHARECERTIFICATE

Notice Is hereby given that tthe below mentioned Share Certificate(s) issued by M/s. Shriram Finance Ltd (Formerly known as Shriram Transport Finance Company Ltd) in our name(s) has been lost/misplaced.

Folio No	Certificate No.	Distinctive No	No.of Shares
50094	338776-338787	14753367-14753966	600
	426322 -426345	21056404 -21057603	1200
	528626--528649	30125144-30126343	1200

Due notice thereof has been given to the Company and We have applied to the Company for the issue of Duplicate Share Certificate.
The public is hereby warned against purchasing or dealing in any way with the above Share Certificate. Any Person who has any claim in respect of the said Share Certificate(s) should lodge such claim with Shriram Finance limited, Sri Towers,14A. South Phase Industrial Estate, Guindy, Chennai - 600 032 or Its Share Transfer Agents, Integrated Registry Management Services Private Limited, 'Kences Towers', 2nd Floor,No.1, Ramakrishna Street, North Usman Road, T Nagar, Chennai-600 017 within 15 days of publication of this notice, else the Company will proceed to Issue duplicate certificate(s),without further intimation
Name of the share holder: AHILA P & SENTHIL KUMARAN P
Place : No 29 SWAMI MADA STREET, THIRUVARUR-610 001

நியோஜின் பின்டெக் லிமிடெட்

பதிவு அலுவலகம் : MIG 944, தரை தளம், டிஎன்எச்பி காலனி, 1வது மெயின் ரோடு, வேளச்சேரி, சென்னை, தமிழ்நாடு 600 042
கார்ப்பரேட் அலுவலகம் : நீல்கந்த் கார்ப்பரேட் ஐடி பார்க், 311/312, கிரோல் சாலை, வித்யாவிகார் (மேற்கு), மும்பை 400 086.
CIN: L65910TN1988PLC131102 மின்னஞ்சல்: niyogin.compliance@niyogin.in வலைத்தளம்: www.niyogin.com

31 டிசம்பர், 2023ல் முடிந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கையாகாத தனியான மற்றும் ஒருங்கிணைந்த முடிவுகள் சுருக்கம்

ரூ. லட்சத்தில்

வ. எண்	விவரங்கள்	தனியானது						ஒருங்கிணைந்தது					
		31 டிசம்பர் 2023ல் முடிந்த காலாண்டு (தணிக்கை செய்யாதது)	30 செப்டம்பர் 2023ல் முடிந்த காலாண்டு (தணிக்கை செய்யாதது)	31 டிசம்பர் 2023ல் முடிந்த ஒன்பது மாதங்கள் (தணிக்கை செய்யாதது)	31 டிசம்பர் 2022ல் முடிந்த காலாண்டு (தணிக்கை செய்யாதது)	31 டிசம்பர் 2022ல் முடிந்த ஒன்பது மாதங்கள் (தணிக்கை செய்யாதது)	31 மார்ச் 2023ல் முடிந்த ஆண்டு (தணிக்கை செய்தது)	31 டிசம்பர் 2023ல் முடிந்த காலாண்டு (தணிக்கை செய்யாதது)	30 செப்டம்பர் 2023ல் முடிந்த காலாண்டு (தணிக்கை செய்யாதது)	31 டிசம்பர் 2023ல் முடிந்த ஒன்பது மாதங்கள் (தணிக்கை செய்யாதது)	31 டிசம்பர் 2022ல் முடிந்த காலாண்டு (தணிக்கை செய்யாதது)	31 டிசம்பர் 2022ல் முடிந்த ஒன்பது மாதங்கள் (தணிக்கை செய்யாதது)	31 மார்ச் 2023ல் முடிந்த ஆண்டு (தணிக்கை செய்தது)
1	செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம்	1,069.56	890.89	2,722.66	602.50	1,975.13	2,631.63	5,376.92	4,739.93	14,671.27	2,698.05	8,087.13	11,717.75
2	காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்)	(154.45)	(356.60)	(721.35)	(172.45)	(481.51)	(636.84)	(482.38)	(1,117.81)	(2,315.13)	(870.39)	(2,482.49)	(2,812.73)
3	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	(154.45)	(356.60)	(721.35)	(172.45)	(481.51)	(636.84)	(482.38)	(1,117.81)	(2,315.13)	(870.39)	(2,482.49)	(2,812.73)
4	வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	(154.45)	(356.60)	(721.35)	(172.45)	(481.51)	(636.84)	(459.21)	(979.88)	(2,103.03)	(886.42)	(2,504.19)	(2,838.63)
5	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது)	(155.95)	(364.02)	(728.77)	(170.95)	(477.74)	(632.23)	(460.71)	(987.30)	(2,110.45)	(884.92)	(2,500.42)	(2,826.00)
6	சமபங்கு மூலதனம் ((முக மதிப்பு ஒவ்வொன்றும் ரூ.10/–)	9,447.02	9,444.90	9,447.02	9,433.93	9,433.93	9,433.93	9,447.02	9,444.90	9,447.02	9,433.93	9,433.93	9,433.93
7	இதர சமம்	-	-	-	-	-	19,284.20	-	-	-	-	-	17,821.88
8	இருப்பு (மறுமதிப்பீடு இருப்பு நீங்கலாக) கடந்த இருப்புநிலை அறிக்கையில் கண்டுள்ளபடி	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
9	பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் ரூ.10) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்டசெயல்பாடுகள்)	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
	அடிப்படை (ரூ.)	(0.16)	(0.38)	(0.76)	(0.18)	(0.51)	(0.68)	(0.33)	(0.72)	(1.55)	(0.57)	(1.61)	(1.87)
	டைலூட்டட் (ரூ.)	(0.16)	(0.37)	(0.75)	(0.18)	(0.51)	(0.67)	(0.32)	(0.70)	(1.51)	(0.57)	(1.61)	(1.87)
10	நிகர மதிப்பு	30,236.34	30,359.69	30,236.34	28,769.43	28,769.43	28,718.13	28,847.69	29,275.80	28,847.69	29,009.44	29,009.44	28,711.18
11	கடன் சேவை பாதுகாப்பு விகிதம் (DSCR)	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
12	வட்டி சேவை பாதுகாப்பு விகிதம் (ISCR)	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
13	கடன் சம விகிதம்	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
14	மூலதன மீட்பு இருப்பு	-	-	-	-	-	-	-	-	-	-	-	-

குறிப்பு: செபி (பட்டியல் மற்றும் இதர வெளியீட்டு தேவைகள்) விதிகள் 2015, விதி 33 மற்றும் ஜூலை 05, 2016 தேதியிட்ட செபி சுற்றறிக்கை ஆகியவற்றின் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள டிசம்பர் 31, 2023ல் முடிந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான நிதிநிலை முடிவுகளின் காலாண்டுக்கான சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டிற்கான முடிவுகளின் (தனியானது மற்றும் ஒருங்கிணைந்தது) முழு விவரம் பிஎஸ்இ இணையதளம் www.bseindia.com மற்றும் நியோஜின் பின்டெக் லிமிடெட் இணைய தளம் www.niyogin.com ஆகியவற்றில் உள்ளது.

நியோஜின் பின்டெக் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/–
தஷ்விந்தர் சிங்
நிர்வாக இயக்குனர் & தலைமை செயல் அதிகாரி
DIN: 06572282

தேதி : பிப்ரவரி 09, 2024
இடம் : மும்பை